பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

16 07 2024 **TUESDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஜம்மு காஷ்மீரின் தோடா மாவட்டத்தில் பாதுகாப்புப்படையினர், தீவிரவாதிகள் இடையேயயான மோதலில் ஒரு அதிகாரி உட்பட நான்கு ராணுவத்தினர் வீர மரணமடைந்தனர்.

2. காவல் நிலையத்தை சாட்சிகளை விசாரிப்பதற்கான இடமாக பயன்படுத்தப்படக்கூடாது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. காவிரியில் தமிழகத்துக்குரிய நீரை பெறுவது தொடர்பாக, சட்டமன்ற அனைத்துக்கட்சி தலைவர்கள் கூட்டம் இன்று சென்னையில் நடைபெற்றது.

4. தமிழகத்தில் 100 கோடி ரூபாய் மதிப்பிலான நிலத்தை போலி ஆவணங்கள் மூலம் அபகரித்ததாக கூறப்படும் புகாரில் முன்னாள் அமைச்சர் திரு எம் ஆர் விஜயபாஸ்கர் இன்று கேரளாவில் கைது செய்யப்பட்டார்.

5. உலகக்கோப்பை ஜூனியர் துப்பாக்கி சுடும் போட்டியில் இந்தியாவின் **Bhavtegh Singh Gill** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

**<<<<<<<>>>>>>**

ஜம்மு காஷ்மீரின் தோடா மாவட்டத்தில் பாதுகாப்புப்படையினர், தீவிரவாதிகள் இடையேயயான மோதலில் ஒரு அதிகாரி உட்பட நான்கு ராணுவத்தினர் வீர மரணமடைந்தனர்.

தோடா மாவட்டத்தின் தாரிகோட் பகுதியில் நேற்றிரவு பாதுகாப்புப்படையினர் தேடுதல் வேட்டை நடத்தியபோது அவர்கள் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதாகவும், அதில் காயமடைந்த நான்கு வீரர்களும் இன்று காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

உயிரிழந்த வீரர்களுக்கு ஜம்மு காஷ்மீர் துணை நிலை ஆளுநர் திரு மனோஜ் சின்ஹா அஞ்சலி செலுத்தினார்.

உயிரிழந்த வீரர்களின் குடும்பத்தினருக்கு பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், ராணுவ தலைமை தளபதி ஜெனரல் உபேந்திர திவேதி ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே, இந்த சம்பவம் தொடர்பாக, ராணுவ தலைமை தளபதி ஜெனரல் உபேந்திர திவேதியிடம், பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

இருதரப்புக்கும் இடையே தாக்குதல் தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில், கள நிலவரம் குறித்து திரு திவேதியிம், திரு ராஜ்நாத் சிங் கேட்டறிந்தார்.

தமது தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் நடைபெற்றுவரும் இந்த மோதல் கவலை அளிப்பதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

காஷ்மீர் பள்ளத்தாக்கு பகுதியில் அமைதி நீடிக்க மக்கள் ஒன்றிணைய வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்நிலையில், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி, உயிரிழந்த வீரர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>

காவல் நிலையத்தை சாட்சிகளை விசாரிப்பதற்கான இடமாக பயன்படுத்தப்படக்கூடாது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மத்திய உள்துறை செயலாளர் திரு அஜய் பல்லா, அனைத்து மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களின் தலைமைச் செயலாளர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில், இதனை குறிப்பிட்டுள்ளார்.

புதிதாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள குற்றவியல் சட்டமான பாரதிய நஹரிக் சுரக்ஷா சன்கிதா-வின் கீழ், காணொளி வாயிலாக சாட்சிகளை விசாரணை செய்வதற்கு அனைத்து காவல் நிலையங்களும் பொருத்தமான இடத்தை கண்டறிய வேண்டும் என்றும், அக்கடிதத்தில் அவர் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<<>>>>>>

நாட்டில் நடப்பு கரீஃப் பருவத்தில் 575 லட்சம் ஹெக்டேரில் பயிர்கள் நடவு செய்யப்பட்டுள்ளதாக வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் 521 லட்சம் ஹெக்டேரில் மட்டுமே பயிர்கள் நடவு செய்யப்பட்டு இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பருப்பு சாகுபடி இந்த ஆண்டு 62 லட்சம் ஹெக்டேரில் மேற்கொள்ளப்படுவதாகவும் கடந்த ஆண்டு இது 50 லட்சம் ஹெக்டேராக இருந்தது எனவும் அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் நெல் நடவு 95 லட்சம் ஹெக்டேரில் மேற்கொள்ளப்பட்டதாவும் இந்த ஆண்டு அது 115 லட்சம் ஹெக்டேராக அதிகரித்துள்ளது எனவும் வேளாண் அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<<<<>>>>>>

செயற்கை நுண்ணறிவு விழிப்புணர்வு தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம், அன்றாட வாழ்வில் தவிர்க்க முடியாததாக வளர்ச்சி பெற்று வருவதையும், அதனால் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை அங்கீகரிக்கும் வகையிலும் இந்நாள் கடைபிடிக்கப்படுகிறது.

<<<<<<<>>>>>>

தமிழகத்தில், 100 கோடி ரூபாய் மதிப்பிலான நிலத்தை போலி ஆவணங்கள் மூலம் அபகரிப்பு செய்ததாக கூறப்படும் புகாரில் முன்னாள் அமைச்சர் திரு எம் ஆர் விஜயபாஸ்கர் இன்று கேரளாவில் கைது செய்யப்பட்டார்.

சிபிசிஐடி காவல்துறையினர் அவரை தேடிவந்த நிலையில், கேரளாவில் அவர் தங்கியிருப்பதாக கிடைத்த தகவலையடுத்து, அவர் கைது செய்யப்பட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

இந்த வழக்கில் தொடர்புடைய அவரது உறவினர் திரு சேகரும் கைது செய்யப்பட்டார்.

விரைவில் அவர்கள் கரூருக்கு அழைத்துவரப்படுவார்கள் என்று காவல்துறையினர் கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>

காவிரியில் தமிழகத்துக்குரிய நீரை பெறுவது தொடர்பாக, மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு துரைமுருகன் தலைமையில் சட்டமன்ற அனைத்துக்கட்சி தலைவர்கள் கூட்டம் இன்று சென்னையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் தமிழக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் பங்கேற்றார்.

அஇஅதிமுக, காங்கிரஸ், பிஜேபி, பாமக, மதிமுக, இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், விடுதலை சிறுத்தைகள் கட்சி உட்பட பல்வேறு கட்சிகளின் பிரதிநிதிகளும் இந்த கூட்டத்தில் பங்கேற்றனர்.

சட்ட வல்லுநர்களும் இதில் பங்கேற்றனர்.

<<<<<<<>>>>>>

வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர் இரண்டு நாள் அரசு முறைப் பயணமாக இன்று மொரீஷியஸ் சென்றடைந்தார்.

அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் திரு மனீஷ் கோபின் அவரை வரவேற்றார்.

இந்த பயணம் குறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள திரு ஜெய்சங்கர், இருநாடுகளுக்கும் இடையேயான சிறப்பான உறவை இந்த பயணம் மேலும் வலுப்படுத்தும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பயணத்தின்போது, மொரீஷியஸ் பிரதமர் திரு பிரவிந்த் ஜுக்னாத்தை சந்தித்து இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்து அவர் பேச்சு நடத்தவுள்ளார்.

மொரீஷியஸின் மூத்த அமைச்சர்களுடனும் திரு ஜெய்சங்கர் பேச்சு நடத்தவுள்ளார்.

<<<<<<<>>>>>>

நீட் வினாத்தாள் முறைகேடு வழக்கில் மேலும் ஒருவரை சிபிஐ கைது செய்துள்ளது.

நேற்றிரவு, ஜார்கண்டில் உள்ள ஹசாரிபாகில் அந்த நபரை கைது செய்ததாகவும், இதுவரை இந்த வழக்கில் ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் சிபிஐ தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட நபரிடம் சில முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் சிபிஐ கூறியுள்ளது.

<<<<<<<>>>>>>

பீகார் மாநிலம் பாட்னாவில் இன்று காலை நேரிட்ட சாலை விபத்தில் ஆறு பேர் உயிரிழந்தனர். ஏழு பேர் காயமடைந்தனர்.

பாட்னா – பக்தியார்பூர் நெடுஞ்சாலையில் கனரக வாகனம் மீது கார் மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாகவும், காயமடைந்தவர்களுக்கு பாட்னா மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் காவல்துறை தெரிவித்துள்ளது.

<<<<<<<>>>>>>

அமெரிக்க அதிபர் பதவிக்கான தேர்தலில், குடியரசு கட்சி வேட்பாளராக முன்னாள் அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்பும், துணை அதிபர் பதவிக்கு திரு ஜெ டி **Vance**-ம் போட்டியிடுவார்கள் என்று அக்கட்சி அறிவித்துள்ளது.

மில்வாக்கியில் நேற்றிரவு நடைபெற்ற அக்கட்சி கூட்டத்தின் முடிவில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

நாட்டின் மேற்கு கடலோரப் பகுதிகளிலும், குஜராத், மஹே பகுதிகளிலும் அடுத்த ஐந்து நாட்களுக்கு கனமுதல் மிக கனமழை வரை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தெலங்கானா, சட்டீஸ்கர், ஆந்திராவின் கடலோரப்பகுதிகள், கர்நாடகாவின் வடக்குப்பகுதிகளின் சில இடங்களில் இன்று முதல் நான்கு நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

அருணாச்சலப்பிரதேசம், அஸ்ஸாம், மேகாலயா, சிக்கிம், மேற்குவங்கத்தின் இமயமலையை யொட்டியுள்ள பகுதிகளில் அடுத்த மூன்று நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

மேற்கு தொடர்ச்சி மலை பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்துவரும் நிலையில், கோவை பில்லூர் அணை அதன் முழு கொள்ளளவை எட்டியுள்ளது.

இதையடுத்து, அணையிலிருந்து வினாடிக்கு 14 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறக்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - கோவை ஹரிஹரன் - 45 செகண்ட்ஸ்)*

இதனிடையே, ஒகேனக்கல் காவிரி ஆற்றில் இன்று நீர்வரத்து வினாடிக்கு 19 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் இன்று கனமுதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதையொட்டி, அம்மாவட்டத்தில் உள்ள அனைத்துப்பள்ளிகளுக்கும் இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<<<<>>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை ஜூனியர் துப்பாக்கி சுடும் போட்டியில் இந்தியாவின் **Bhavtegh Singh Gill** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

இத்தாலியில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் **Skeet** பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

----------

உலக ஜூனியர் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் **Shaurya bawa** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

அமெரிக்காவின் ஹூஸ்டனில் நடைபெற்று வரும் 19 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 2-11, 11-4, 10-12, 11-8, 12-10 என்ற செட் கணக்கில், மலேசியாவின் **Low Wa Sern** –ஐ தோற்கடித்தார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் **Anahat singh**, எகிப்தின் **Nadien El Hammamy** –யிடம் தோல்வியடைந்தார்.

-----------

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் திருச்சி அணி இன்று கோவை அணியை எதிர்கொள்கிறது.

கோவையில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு மணி 7.15-க்கு தொடங்குகிறது.

-----------------

ஸ்வீடிஷ் ஓபன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் சுமித் நாகல் இன்று சுவீடனின் **Elias Yemer**-ஐ எதிர்கொள்கிறார்.

**<<<<<<<>>>>>>**